57—

இராஜகோபுரம்

***71707—திரு. சை. சையது கௌஸ் பாஷா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலுக்கு இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் உட்பட மொத்தம் 14 கோபுரங்களுக்கு முழுமையான திருப்பணிகளைச் செய்து, கடந்த 8-4-2009 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டது. இந்த நிலையில் இத்திருக்கோயிலில் புதியதாக இராஜகோபுரம் கட்டுவதற்கான தேவை தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.*

திரு. சை. சையது கௌஸ் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புதிய சட்டப் பேரவையில் முதல்முறையாக பேசுகின்ற வாய்ப்பையும், தகுதியையும் எனக்குத் தந்த உலகத் தமிழர்களின் ஒரே தலைவர், ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், இளைஞர்களின் எழுஞாயிறு, துணை முதல்வர் தளபதி அவர்களுக்கும், என்னைப் போன்ற ஏழைத் தொண்டர்களின் இதயத் துடிப்பாக விளங்கக்கூடிய இளைய கலைஞர் மத்திய அமைச்சர், ஆற்றல் அரசர் அஞ்சா நெஞ்சன் அண்ணன் அழகிரி அவர்களுக்கும், தங்களுக்கும், என் தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது வினாவினைத் தங்களின் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டுகின்ற முயற்சியிலே மன்னர் திருமலை நாயக்கர் ஈடுபட்டு பணி செய்கின்ற நேரத்திலே அந்த இடத்திற்குரிய கல்லை வெட்டி

2010 ஏப்ரல் 19]

எடுக்கின்ற நேரத்திலே, அந்த இடத்தில் கல்லில் தேரை இருந்ததைக் கண்டதாகவும், அதனால் அந்தக் கல் கட்டடத்திற்கு உகந்தது அல்ல என்றும், இராஜகோபுரப் பணியினை நிறுத்தி வைத்ததாகவும், இன்றைக்கும் அது விட்ட வாசல் என்றும், மொட்டை கோபுர வாசல் என்றும் அழைக்கப்படுகிறது. வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்திலே, மேற்கண்ட இடத்தில் அந்த கோபுரத்தை, ஸ்ரீரங்கம் இராஜகோபுரத்தைக் கட்டியது போன்று, மன்னர் விட்டுச்சென்ற பணியை மாமன்னர், ஒப்பற்ற தலைவர் கலைஞர் ஆட்சியிலே கட்டித் தர (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதோடு, இந்தக் கோயிலுக்குச் சொந்தமான மண்டபம் பாழடைந்த நிலையில் கல்பாலத்திற்கு அருகே வைகை ஆற்றின் மையத்தில் உள்ளது. இதைச் சீரமைத்து அழகுபடுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் தங்களின்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற, இராயகோபுரம் என்று அழைக்கப்படுகின்ற அது, மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் வளாகத்தில் தனிப்பட்ட முறையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அது இராயகோபுரம் என்றும், மொட்டை கோபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. நான் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல கடந்த ஆண்டு திருப்பணி நடைபெற்ற நேரத்தில் ஏறத்தாழ பல்வேறு பணிகள் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 08-04-2009 அன்று மீனாட்சியம்மன் கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்பட்டது. அந்த நேரத்தில் இந்த இராயகோபுரம் பழுதடைந்த நிலையில் செடிகள், மரங்கள் முளைத்து சிதிலம் அடைந்திருந்த நிலையினை உணர்ந்து, அதற்காகத் தனியாக ரூபாய் 10 இலட்சம் செலவிடப்பட்டு, இப்பொழுது புதுப் பொலிவோடு இருக்கிறது. ஆகவே, அந்த இராயகோபுரத்தை இராஜகோபுரமாக மாற்றுகின்ற உத்தேசம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

[2010 ஏப்ரல் 19

திரு. சை. சையது கௌஸ் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, மறு பரிசீலனை செய்து மதுரை மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையான, உலக அதிசயங்களிலே ஒன்றாக இருக்கக்கூடிய மீனாட்சியம்மன் கோயிலில் விடுபட்ட அந்த இராயகோபுரப் பணியினைத் தலைவர் கலைஞர் ஆட்சியில் தொடங்கி அந்தக் கோவிலின் திருப்பணி முழுமையடைய, இராயகோபுரத்தைக் கட்ட ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்வதோடு, மதுரை மாநகரம் ஒரு கோவில் மாநகரமாகும். இங்கு வருமானம் கிடைக்கக்கூடிய பல பிரசித்தி பெற்ற கோவில்களும், அதற்குச் சொந்தமான பல குளங்களும் உள்ளன. மேற்கண்ட குளங்களிலெல்லாம் ஆண்டுதோறும் நீர் நிரம்பி இருக்கவும், அதைப் பராமரிக்கவும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொண்டு, ஏனென்றால் மதுரை மாநகரில் வேறு பொதுக் குளங்கள் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட குளங்களில் நீரை நிரப்பி வைப்பதன்மூலம் மாநகரின் நிலத்தடி நீர் உயர்வதற்கு உதவியாக இருக்கும். இதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, வைகை ஆற்றில் இருக்கக்கூடிய மைய மண்டபத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் தமது கருத்தைத் தெரிவிப்பார்களா என்பதையும் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் மைய மண்டபத்தில் தேவையான பணிகள் உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு இணங்க செய்து தரப்படும். கோயில் நகரம் என்று அழைக்கப்படுகின்ற மதுரையில், ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் திருக்குளங்கள் அமைந்திருப்பது உண்மை. ஆனால், அந்தத் திருக்குளங்களில் போதிய நீரைத் தொடர்ந்து நிறுத்த முடிவதில்லை. காரணம், திருக்கோயில்களைச் சுற்றி இருக்கக்கூடிய குடியிருப்புப் பகுதிகளில் ஏராளமான ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதன்மூலமாக நீர் வெகுவாக உறிஞ்சப்படுகின்றது. அதனால், நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து கொண்டிருக்கிறது. இந்நிலையிலேகூட, மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு உப

2010 ஏப்ரல் 19]

கோயிலாகக் கருதப்படுகின்ற மாரியம்மன் திருக்கோயில் பற்றி தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள்கூட வலியுறுத்தி வந்தார்கள். அவர்களுடைய வலியுறுத்தலை நிறைவேற்றுகின்ற வகையிலே மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு, விவரங்களைச் சேகரித்த நேரத்தில், தண்ணீர் வற்றாமல் இருக்க வேண்டுமானால் அதற்காக ஆண்டு ஒன்றுக்கு 36 இலட்சம் ரூபாய் மின் கட்டணத்திற்காகச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கும் நாம் தயாராக இருந்தாலுங்கூட, வைகை ஆற்றில் நிரந்தரமாகத் தண்ணீர் வருவதில்லை என்றும், அங்கும் நிலத்தடி நீர் குறைந்து கொண்டே வருகின்ற காரணத்தால், மணலூர் போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, குளத்தை மாநகராட்சியிடம்கூட தருவதற்குத் தயாராக இருக்கிறோம். தண்ணீர் நிரப்புகின்ற பணியை மாநகராட்சியோ, அரசின் பிற துறைகளோ ஏற்றுக்கொண்டால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

58—

நடுநிலைப் பள்ளி

***83334—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காளகஸ்திநாதபுரத்தில் நடுநிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, காளகஸ்திநாதபுரத்தில் நடுநிலைப் பள்ளி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.